DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru.V.Premkumar, B.A.,B.L.,
District Munsif, Uthamapalayam.

**O.S.No: 207 / 2017**

Name : கருப்பன் என்ற பெரியகருப்பன் PW1 :

---

நாள் : 13.10.2020

**குறுக்கு விசாரணை**

தாவா சொத்தின் மொத்த அளவு எவ்வளவு என்றால் தெரியாது. தாவா சொத்தின் நான்கு மால் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து ஆதியில் எனது தகப்பனார் மற்றும் தாயாருக்கு பாத்தியப்பட்டிருந்தது. 24.01.2006 ம் தேதி எனது தாயார் அழகம்மாள் பிரதிவாதிக்கு பதிவு தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரையின் விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் என்ன விபரம் எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் படிக்காத ஆள். நிரூபண வாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ எனக்கு எழுதப்படிக்கத்தெரியாது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நானும் பிரதிவாதியும் தனித்தனியாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். 06.08.2006 ம் தேதி எனது தகப்பனார் எனக்கு எழுதி வைத்த தானசெட்டில் மெண்ட் பத்திரத்தின் படி நான் தனியாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சொத்தை பிரித்துக்கொள்வோம் என்று நான் பிரதிவாதியிடம் நேரடியாக கேட்டுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 06.08.2006 ம் தேதிய தானசெட்டில் மெண்ட் பத்திரமானது முழுச்சொத்துக்கும் எழுதப்பட்டது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றாலும் அது செல்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எ னது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது தாயார் அழகம்மாள் பிரதிவாதிக்கு 24.01.2006 ம் தேதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட சொத்தை அவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 24.01.2006 ம் தேதிய செட்டில்மெண்ட்

பத்திரத்தை எனது தாயார் உயிருடன்இருக்கும் போதே ரத்து செய்து விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அதன் பிறகு 17.01.2013 ம் தேதி எனது தாயார் அழகம்மாளிடம் தாவா சொத்தில் சரிபாதியை பிரதிவாதி கிரையம் வாங்கி பதிந்துகொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையத்திற்கு பிறகு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு அவர் பெயரில் வீட்டுவரி செலுத்தி, பட்டா வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் தெரியாது. எனது தகப்பனாரிடம் இருந்து எழுதி வாங்கிய தானசெட்டில் மெண்ட் பத்திரமானது தாவா சொத்து முழுவதுக்கும் எழுதியதால்அது செல்லாது என்றால் சரியல்ல. அதில் பாதி பாகம் தந்தால் போதும். தற்போது எனது தாயாரும், தகப்பனாரும் காலமாகிவிட்டனர். எனது தகப்பனார் சொத்தில் பிரதிவாதிக்கு பாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல. எனது அம்மா சொத்தில் எனக்கு பாதி பங்கு உள்ளது. எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சரிபாதி பங்கை பிரதிவாதி கிரையம் வாங்கிவிட்டதால் அதில் எனக்கு பங்கு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனாரிடம் எந்த தேதியில் தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் படிக்காதவன். தாவா சொத்தின் மொத்த அளவு எனக்கு தெரியாது. எனக்கு பிராது பற்றியும் சொத்து விபரத்தை பற்றியும் தெரியாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/Sd/ V. பிரேம்குமார், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.